**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.292/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | அந்தோனி சார்லஸ்(PW2) | | |
| Father's Name | லூர்துராஜ் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | **44** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Absent, petition filed and allowed)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.07.2023 தேதி மாலை 06.15-06.30 மணி இருக்கும் வேலை முடித்துவிட்டு கடையில் பால் வாங்குவதற்காக லூர்துபுறம் பேருந்து நிறுத்தம் அருகே சென்றேன். நான் கடையில் இருந்தபோது வாகனங்கள் மோதிக் கொள்ளும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தேன். ஒரு இருசக்கர வாகனமும் 407 டிராவல்ஸ் வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. டிராவல்ஸில் வந்தவர்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு உடல் முழுவதும் காயமாகி இரத்த வெள்ளத்தில் இருந்தார். அவரது செல்போனை எடுத்து அவரது கை ரேகையை வைத்து அவரது அப்பாவிற்கு தகவல் சொன்னோம். தனியார் ஆம்புலன்ஸ் வரவழைத்து காயம் பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். காயம்பட்ட நபரின் பெயர் பிரபாகரன் ஆகும். காயம் பட்ட நபரை நாங்கள் கவனித்ததால் டிராவல்ஸ் ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்த சேவூர்- புளியம்பட்டி ரோடு அதிக போக்குவரத்து உள்ள சாலை என்றால் விபத்து சமயத்தில் அதிக போக்குவரத்து இல்லை. விபத்தில் இறந்து போன பிரபாகரன் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த போது அவர் தலைக்கவசம் அணிந்து

இருந்தாரா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. விபத்து நடந்து எத்தனை நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்று இருப்பேன் என்றால் இரண்டு செகண்ட். விபத்து நடக்கும்போது நான் கடையினுள் தான் இருந்தேன்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |